**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**M.C.O.P. No. 598/2022**

**01.02.2024–எ.மா..சா.1 திரு. மணிரத்தினம் சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் M.A. B.ed படித்துள்ளேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக 8 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். விபத்து நடந்த தேதியன்று என்க்கு ஒட்டுநர் உரிமம் இல்லை. நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனக்கு ஒட்டுநர் உரிமம் இன்றி வாகனம் ஓட்ட தெரியாமல் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் என்னையும் ஏழுமலையும் ஒரே டாடா ஏசி வாகனத்தில் வானாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கொண்டு போய் சேர்த்தார்கள். அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பிறகு திருவண்ணாமலை அரசு மருத்துவமணையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் அட்மிட் செய்தார்கள். ஏழுமலையும் அவ்வாறு திருவண்ணாமலை அரசு மருத்துமணையில் அட்மிட் செய்தார்களா என்றால் என்க்கு தெரியாது. எனக்கு நன்றாக் தெரியும் என்று வழக்குகிற்காக தெரியாது என பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ஏழுமலையும் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துமணையில் அட்மிட் செய்தார்கள். என்றால் சரிதான். சிகிச்சை பலன் இன்றி மறுநாள் அரசு மருத்துவமணையில் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்ததை சாதகமாக ஆக்கிக்கொண்டு என்னை குற்ற வழக்கில் இருந்து காப்பற்றும் பொருட்டு எனது அப்பா தவறான தகவல்களுடன் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பா விபத்தை நேரில் பார்க்கவில்லை. ஏழுமலை குடிபோதையில் இருந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் மயக்கமாகிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆரம்ப சுகாதார நிலையம் சென்ற பிறகு தான் சுய நினைவின்றி ஆனேன். காயம்பட்ட இடத்திலேயே நான் சுய நினைவு இழந்தேன் என்றால் சரியல்ல. ஆனால் தலை

சுற்றல் மட்டும் இருந்தது. விபத்தால் எனக்கு எந்த பாதிப்பு ஏற்படவில்லை என்றும் எனக்கு செவித்திறன், பார்வை திறன் குறைபாடு விபத்தால் ஏற்பட்டது என தவறாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு நான் பேருந்தில் வந்தேன். விபத்து என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் ஆகவே மனுதாரருக்கு நான் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர்களுக்கு எதிராக இழப்பீடு கோரி நான் திருவண்ணாமலை சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் MCOP. No. 363/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த மனுதாரர்கள் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளதை நான் படித்துபார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த எதிர் வழக்குரையில் இந்த மனுதாரர்கள் விபத்து வழக்கு முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்யசொல்லி காவல் ஆய்வாளர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் புகார் கொடுத்துள்ளதாக சொல்லி உள்ளார்கள் என்றால் தெரியவில்லை. எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் ஏழுமலை வருவாயை சார்ந்து வாழவில்லை என்று நான் தவறாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. குணசேகரன் என்பவரை மிரட்டி மனுதாரர்கள் பணம் வாங்கிவிட்டார்கள் என தவறாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் காப்பீடு நிறுவனத்துடன் சமாதனம் பேசி ரூ.2,51,900 தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். அந்த சமதானத் தீர்ப்பு செல்லாது என சொல்லி இந்த வழக்கின் மனுதாரர்கள் காப்பீடு நிறுவனத்தில் ஆட்சேபனை கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் காரணமாக தான் இழப்பீடு தொகையை நான் பெறவில்லை என்றால் சரிதான். புலன் ஆய்வு அதிகாரியின் அறிக்கைப்படி விபத்திற்கு நான் காரணம் என்பதால் காப்பீடு நிறுவனம் மேற்படி இழப்பீடு தொகையை எனக்கு

தரவில்லை என்றால் சரியல்ல. ஏழுமலையின் பிரேத பரிசோதனை அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு ஒரு தேதிக்கு ஒத்துவைக்கப்படுகிறது.**

**/உண்மை நகல்/**

ஒப்பம்/−P.மதுசூதனன்,

**முதன்மை மாவட்ட நீதிபதி.**